# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 20. பூங்காக்கள் (சிறுவர்/பொது)

'கோவிட்' ற்கு எதிர்வினையாற்றும் தற்போதைய சூழ்நிலை காரணமாக ஆட்களுக்கு இடையிலான உடல் இடைவெளியினைப் பேணும் பொருட்டு பூங்காக்களைப் பயன்படுத்துபவர்களது எண்ணிக்கையினை குறைக்க வேண்டும்.

**பிரத்தியேக தகவல்கள் / வழிகாட்டல்கள்**

**முகாமைத்துவப் பணியாளர்கள்**

- பூங்காவின் கொள்ளளவிற்கு ஏற்ப நபர்களது எண்ணிக்கையானது மட்டுப்படுத்தப்பட வேண்டும்.
- பூங்காவில் 'முகக்கவசம் அணிவது பரிந்துரைக்கப்படுகிறது', 'சுவாச நற்பழக்கவழக்கங்கள்', மற்றும் அந்நியர்களுக்கு இடையே ஒரு மீற்றர் உடல் இடைவெளியினைப் பேணுதல்' ஆகியவை தொடர்பான அறிவித்தல்களைக் காட்சிப்படுத்துதல் கண்டிப்பாக வலியுறுத்தப்படுகிறது.
- சுகாதாரத்துறையினர் அனுமதிக்கும் வரையில் சிறுவர் பூங்காவின் விளையாடும் பகுதிகள் இயங்கக்கூடாது.
- நபர்களது எண்ணிக்கைகள் மட்டுப்படுத்தப்படுவதால் ஒரு குழந்தையுடன் ஒருவர் வீதமே அனுமதிக்கப்பட வேண்டும்.
- பணம் மற்றும் பற்றுச் சீட்டு ஆகியவற்றினைப் பலர் கையாள்வதை குறைக்கும் ஒரு முறையானது கைக்கொள்ளப்படவேண்டும்.
- வளாகத்தினுள் நுழையும் முன்னர் கைகழுவும் வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.
- பூங்காவின் உள்ளே மற்றும் அருகாமையில் உணவு விற்பனை செய்வோர் / பிற வியாபாரிகள் முகக் கவசம் அணியுமாறு ஆலோசனை வழங்கப்பட வேண்டும் என்பதுடன் கைச் சுகாதாரம் மற்றும் நபர்களுக்கு இடையில் இடைவெளி ஆகியவற்றினைப் பேணுமாறு ஊக்குவிக்கப்பட வேண்டும்.
- வழங்கப்பட்ட உத்தரவாத படிவத்தை நீங்கள் நிரப்ப வேண்டும்: இது கொடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு இணங்குவதைக் குறிக்கிறது. உத்தரவாத படிவத்தின் அசல் சுகாதார மருத்துவ உத்தியோகஸ்தரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் நகலை அரச உள்ளூர் அதிகார சபைக்கு (நகராட்சி மன்றம் / நகர சபை / பிரதேசிய சபை ) அனுப்ப வேண்டும் மற்றும் மற்றைய நகலை நீங்கள் வைத்திருக்க வேண்டும். மேலே உள்ள வழிகாட்டுதல்கள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவது அமைப்பு அல்லது வளாக மேலாளரின் பொறுப்பு ஆகும்.

**பயனாளர்களுக்கு**

- பற்றுச்சீட்டு வழங்கும் இடத்தில் ஒருவரில் இருந்து ஒருவருக்கு இடையில் ஒரு மீற்றர் இடைவெளி இருக்கும் வகையில் வரிசையில் காத்திருக்கவும்.
- வரிசையில் நிற்கும் போதும் உணவு/பான விற்பனையாளர்கள் இருக்கும் பகுதிகளிலும் முகக் கவசம் அணிந்திருத்தல் வேண்டும்.
- ஆட்களுக்கு இடையில் ஒரு மீற்றர் உடல் இடைவெளியினை உறுதிப்படுத்தவும்.
- அனுமதிக்கப்பட்ட அளவு ஆட்கள் நிரம்பி இருந்தால் பூங்காவினுள் செல்லாமல் உங்களது சொந்தப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும்.
- உங்களது முகத்தையும், வெளிப்பரப்புகளையும் அனாவசியமாகத் தொடுவதைக் குறையுங்கள்.
- பூங்காவிலிருந்து வந்ததும் சவர்க்காரம் மற்றும் நீர் கொண்டு உங்களது கைகளை ஆகக் குறைந்தது 20 வினாடிகளுக்குக் கழுவுங்கள், மேலும் வீட்டினுள் நுழைவதற்கு முன்பாக முழுகுவதுடன் (தலைக்கு குளிப்பதுடன்) உடுப்புகளைத் தோய்த்துக்/ கழுவிக் கொள்ளுங்கள்.

**அறிவுறுத்தும் முறைகள்**

- அனைத்துப் பூங்காக்களின் நுழைவாயில்களிலும் பூங்கா வளாகத்தின் உள்ளேயும் தேவையான அறிவுறுத்தல்கள் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

- பொதுமக்கள் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுகிறார்களா எனப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கண்காணித்தல் வேண்டும்.




சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020